# நல்ல கற்பித்தலின் ரகசியம்..!

## (Secret of Good Teaching)

ஒரு குழந்தையின் பிறப்பிலிருந்து 4.5 ஆண்டுகள் வரையான காலகட்டமானது, அக்குழந்தையின் புலன்களை சீர்படுத்திக்கொள்வதற்கான ஒரு நுண்மையான காலகட்டம். இந்தப் பருவத்திலுள்ள குழந்தைகள், தங்களைச் சுற்றியுள்ள பல்வேறு பொருட்களின் தன்மைகள் மற்றும் பண்புகள் குறித்து பல நூற்றுக்கணக்கான அம்சங்களை பகுத்துணரும் திறனைப் பெற்றுள்ளார்கள். அவர்கள், 6 வயதை எட்டும் முன்னதாகவே, ஒரு தெளிவான நிலைக்கு வந்துவிடுகிறார்கள். குறிப்பிட்ட அடிப்படை விஷயங்களில் குழந்தைகள் தெளிவு பெற்றவுடன், பெரியவர்கள், அத்தகைய விஷயங்களில் வழிகாட்டுவதை நிறுத்தி விடுகிறார்கள்.

வடிவங்களின் பெயர்களை எடுத்துக்கொண்டால், வட்டம், சதுரம் மற்றும் முக்கோணம் போன்றவைகளை குழந்தைகள், தாமே அடையாளம் காணும் நிலைக்கு வரும்போது, பெரியவர்கள் தலையிடத் தேவையில்லை. இந்நிலை இப்படியே தொடரட்டும்.

முட்டை வடிவம், நீள்வட்டம், சமச்சீர் வடிவம், வளைகோடு, செவ்வகம், சரிவகம், சாய்சதுரம், நாற்கரம், ஐங்கோணம், அறுகோணம், எழுகோணம், எண்கோணம், நவகோணம் மற்றும் தசகோணம் போன்ற பல்வேறு வடிவங்களின் படங்கள் மற்றும் பெயர்களை குழந்தைகளுக்கு அறிமுகம் செய்யவும்.

திட வடிவங்களுக்கும் (solid figures) இதே வழிமுறையைப் பின்பற்றலாம். கோளம், கனசதுரம், கூர்நுனிகோபுரம் (Pyramid), செவ்வக முப்பட்டகம், கூம்பு, முட்டை வடிவம், முக்கோண முப்பட்டகம், முக்கோண அடித்தளத்தில் அமைந்த கூம்புருவம் உள்ளிட்டவையே அந்த திடவடிவ அம்சங்கள். வடிவங்களும் எண்களும், குழந்தைகளுக்கு பல்வேறான பண்புகளை அறிமுகம் செய்யும் செயல்பாட்டின் தொடக்க நிலை ஆகும். வண்ணங்கள், சுவைகள், வாசனைகள், பரிமாணங்கள், பொருட்கள் மற்றும் சத்தங்கள் உள்ளிட்ட அனைத்துமே, குழந்தைகளுக்கு வெளிப்படுத்தப்பட வேண்டிய புலன்சார் தகவல்களே.

புதிய தகவலை அறிமுகம் செய்ய, ஒரு குறிப்பிட்ட பொருளின் பண்பை தனிப்படுத்தி, அதன்மூலம் எளிதாக கற்கச் செய்யலாம். கோளம், கனசதுரம் மற்றும் கூர்முனை கோபுரம் ஆகியவற்றுக்கான வார்த்தைகளை அறிமுகம் செய்யும் செயல்பாடு குறித்து இப்போது காணலாம். ஒரு செம்மையான சூழ்நிலையில், வடிவங்கள், ஒரேவிதமான பொருளினால் உண்டாக்கப்பட்டு, ஒரே வண்ணத்தில் அமைந்து, ஒரேவிதமான அளவுகளில் இருக்கிறது. இதன்மூலம், வடிவத்தின் பண்பு தனிமைப்படுத்தப்படும். ஒரு பச்சைநிற 5 அங்குல மர கனசதுரத்தை, சிவப்பு வினைல் பீச் பந்து மற்றும் 1 அங்குல உயரமுள்ள வெள்ளை பிளாஸ்டிக் கூர்முனை கோபுரம் *(pyramid)* ஆகியவற்றுடன் பயன்படுத்துகையில், ஒவ்வொரு வடிவத்தின் சிறப்புப் பண்பும் தனிமைப்படுத்தப்படாது. பதிலாக, வடிவம், வண்ணம் மற்றும் பொருள் உள்ளிட்ட இதரப் பண்புகள், வடிவத்துடன் காட்சிப்படுத்தப்படும். ஒரு அத்தியாவசியப் பண்பை தனிமைப்படுத்தும்போது, விரைவான முறையில், அதிக குழப்பமின்றி கற்றுக்கொள்ள முடிகிறது.

சில ஆண்டுகளுக்கு முன்பாக, நான் ஃபிரெஞ்சு மொழிப் பாடத்தை தீவிர ஆர்வத்துடன் கற்றுக்கொண்டிருந்தேன். அப்போது எனக்கு பல சிறப்பான அனுபவங்கள் நேர்ந்தன. நமக்குப் புரியாதபோது, மொழியின் சத்தங்கள் எவ்வளவு வேகமாக உள்ளன..! ஃபிரெஞ்சு வார்த்தைகள் என்னை வந்தடைந்த விதம் மிகவும் வேகமாக இருந்தது. அதாவது, "இது பச்சைநிற நாற்காலியா?" என்பதுபோன்ற சில எளிய கேள்விகளை நான் கேட்க வேண்டியிருந்தது. ஏனெனில், ஒரு நாற்காலியை மட்டுமே பெறுவது அல்லது பச்சை நிறத்தில் ஏதேனும் ஒன்றைப் பெறுவது என்ற இரண்டில் எது அதிக முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. என்னுடைய இந்த தனிப்பட்ட அனுபவம், 3 வயது காலகட்டங்களில் உள்ள குழந்தைகளின் மீது என்னுள் ஒரு பரிவிரக்கத்தை ஏற்படுத்தியது (அனுபவம் தந்த பாடம்). புதிய ஒரு மொழி, வேகமாகவும், குழப்பமான முறையிலும் குழந்தைகளின் மீது செலுத்தப்படுகிறதல்லவா? ஒரு புதிய மொழியைக் கற்றுக்கொள்கையில், தரத்தை தனிப்படுத்துவதானது, எனக்கு ஒரு புதிய அனுபவத்தைக் கொடுத்தது.

புதிய வார்த்தைகளை அறிமுகம் செய்யும்பொருட்டு, 3 புதிய பொருட்களை ஒரேநேரத்தில் காட்டும்போது, அந்த உத்தி பயனுள்ளதாகத் தெரிகிறது. இரண்டு உருப்படிகளைப் *(items)* பயன்படுத்துவது போதுமான சவாலற்றதாக இருக்கலாம்; அதேசமயம், 4 உருப்படிகளைக் கையாண்டால் அதிக எண்ணிக்கையாக இருக்கலாம். மாண்டிசோரி நுட்பம் என்பது முப்பருவ பாடத்தைக் கொண்டது. அவை,

**முதல் பருவம்: அறிமுகம்**

இது ஒரு வட்டம். இது ஒரு சதுரம். இது ஒரு முக்கோணம்.

**இரண்டாம் பருவம்: எனக்குக் காட்டு**

முக்கோணத்தை எனக்குக் காட்டு. சதுரத்தை எனக்குக் காட்டு. வட்டத்தை எனக்குக் காட்டு

இந்த இரண்டாம் பருவ செயல்பாட்டின்போது, நாம் பல விஷயங்களை, புதிய புதிய முகபாவனை அல்லது உணர்ச்சி வெளிப்பாடுகளுடன் மீண்டும் மீண்டும் செய்கிறோம். 'எங்கே, அந்த வட்டத்தை என் கையில் வை', 'இந்த முக்கோணத்தை எடுத்து மேசையின் மீது வை', இந்த சதுரத்தை அந்த நாற்காலிக்கு கொண்டு போ' என்பன போன்ற பலவிதங்களில்.

**மூன்றாம் பருவம்: பரீட்சை அல்லது சோதனை**

ஒரு பொருளைக் குறிப்பிட்டு, அதைப் பற்றி கேட்டல்: இது என்ன?

அப்பொருளை குழந்தை அறிந்திருந்தால், அப்பொருள் தொடர்பான வேறுபல அம்சங்களையும், குழந்தைக்கு நீங்கள் அளிக்கும் விளக்கத்துடன் இணைத்துக் கொள்ளவும். அப்படியாக, குழந்தை அறியவில்லை எனில், மறுபடியும் இரண்டாம் பருவத்திற்கே நீங்கள் திரும்ப வேண்டும்.

குழந்தைகளுடன் நாம் பணிசெய்யும்போது அல்லது நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது தெரிந்துகொள்ள வேண்டிய முக்கிய விஷயம் என்னவெனில், அவர்களுடன், அன்பும் நம்பிக்கையும் சேர்ந்த ஒரு உறவுமுறையைக் கட்டமைப்பதைத்தான். அதாவது, நீங்கள் விரும்பும் நேரத்தில் குழந்தைகள் உங்களுக்கு சரியான பதிலை அளிக்காவிட்டாலும்கூட, அதனால் நீங்கள் தடம் மாறிவிடக்கூடாது என்பதை நினைவில் வையுங்கள். உதாரணமாக, ஒரு வட்டத்தைக் காட்டி 'இது என்ன?' என்று நீங்கள் கேட்கையில், குழந்தையானது 'சதுரம்' என்று கூறலாம். உடனே நீங்கள், 'இல்லை இல்லை...அது வட்டம்' என்று நேரடி மறுப்பைத் தெரிவிக்காமல், வேறுமாதிரியான நட்புமுறையில் கையாள வேண்டும். உதாரணமாக, உங்கள் விரலை அந்த வட்டத்தின் அருகில் வைத்து, 'எங்கே, எனக்கு வட்டத்தைக் காட்டு; பார்க்கலாம்' என்று கேட்கலாம். ஒரு புதிய தகவலை நம் குழந்தைக்கு

அறிமுகம் செய்வதால், அந்த அறிமுகம் வெற்றிகரமானதாக அமைய வேண்டுமென நாம் விரும்புகிறோம். நம்பிக்கை மற்றும் மரியாதை ஆகியவற்றை கட்டமைத்து, உண்மையான கற்றலுக்கும் இது உதவுகிறது. மேலும், சில ஆய்வு முடிவுகள் கூறுவது என்னவென்றால்; ஒரு தகவல் நமக்கு அறிமுகம் செய்யப்படுகையில், அந்த அறிமுக செயல்பாடு நகைச்சுவை கலந்ததாக இருப்பின், அந்தக் குறிப்பிட்ட தகவலை, நமக்குத் தேவையானபோது நம்மால் எளிதில் நினைவுகூற முடிகிறது என்பதே. எனவே, ஒவ்வொன்றிலும், முடிந்தளவிற்கு நகைச்சுவைக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.

சிலநேரங்களில், எல்லா முப்பருவ பாடங்களையும், ஒரேசமயத்தில் நம்மால் குழந்தைகளுக்கு அறிமுகம் செய்யும் வாய்ப்பு ஏற்படுகிறது. மேலும், சிலநேரங்களிலோ, முதல் பருவத்திலிருந்து மூன்றாம் பருவத்திற்கு செல்வதற்கு, சில வாரங்கள் வரை இடைவெளி ஏற்படலாம். உங்கள் குழந்தையின் கண்களில் தெரியும் அறிகுறிகளை வைத்து, சாதகக் குறிப்புகளை (clues) எடுத்துக் கொள்ளுங்கள். பொதுவாக, ஒரு பாடத்திற்கு 3 அல்லது 4 நிமிடங்கள் போதுமானவை. உங்கள் குழந்தை சோர்வடைவதற்கு முன்னதாக பாடத்தை நிறுத்திவிடுவது மிகவும் முக்கியம்.

புலன்சார் மொழியைக் கற்பதானது, உங்கள் குழந்தைக்கு அதிக சமாளிப்புத் திறனை அளிக்கிறது. உங்கள் குழந்தையின் நடத்தையில் ஒரு கட்டுக்கடங்காத உணர்வெழுச்சி அல்லது அடாவடித்தனம் இருந்தால், குழந்தையானது புலன்சார் உணர்வு சிக்கலில் இருக்கிறது என்பதை அறியுங்கள். எனவே, அதற்கு காரணம் என்னவாக இருக்கும் என்பதை, பொறுமையுடனும் அக்கறையுடனும், குழந்தையின் சூழலை ஆராய்வதன் மூலம் கண்டறிய வேண்டும். உதாரணமாக, உங்கள் குழந்தை ஒரு அறைக்குள் இருக்கும்போது, அதன் நடவடிக்கை கலவரமானதாக இருக்கிறதென்றால், அதற்கான காரணம் என்னவாக இருக்கும் என்பதை அறிதல் அவசியம். அறையில் போதிய காற்றோட்டம் இல்லாமல் இருக்கலாம், தேவையான வெளிச்சம் இல்லாமல் இருக்கலாம், குழந்தை விரும்பும் விளையாட்டு அம்சங்கள் இல்லாமல் இருக்கலாம், அதிகநேரமாக அந்த அறைக்குள்ளேயே இருப்பதாக இருக்கலாம், அந்த அறைக்குள் குழந்தைக்கு எட்ட முடியாத உயரத்தில் ஒரு விரும்பும் பொருள் இருக்கலாம் மற்றும் குழந்தையுடன் இருக்கும் பெரியவர், குழந்தையை வெறுமனே விட்டுவிட்டு தூங்கிக் கொண்டிருக்கலாம். இப்படியான பலவித காரணங்களில், எதனால் குழந்தை இந்தப்

*பிரச்சினையை சந்திக்கிறது என்பதை அக்கறையுடன் கண்டறிந்து, குழந்தைக்கான தீர்வை நாம் கட்டாயம் அளிக்க வேண்டும்.*

***************

*மூல ஆங்கிலக் கட்டுரை:* ***Maren Schmidt* (மாண்டிசோரி ஆய்வாளர்)**

*தமிழ் மொழிபெயர்ப்பு: சொ.பிரசன்ன பாரதி (ரிலீஃப் ஃபவுண்டேஷன், சென்னை)*

*மேலதிக விபரங்களுக்கு: www.relieffoundation.in*